



# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 297 20.04.2026 MONDAY CHITHIRAI: 7 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 297 20.04.2026 திங்கள்கிழமை சித்திரை : 7 விலை : ரூ.5/-


# "அதிமுக ஆட்சி அமைந்ததும் நாமக்கல் 'கிட்னி' திருட்டு குறித்து விசாரணை, நடவடிக்கை உறுதி"

திருச்செங்கோடு: ஏப்.20-

அதிமுக ஆட்சி அமைந்ததும், கிட்னி திருட்டு விவகாரம் குறித்து உரிய விசாரணை நடத்தி சட்டப்படி நடவடிக்கை எடுப்பது உறுது என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல், சேந்தமங்கலம் (தனி), திருச்செங்கோடு, குமாரபாளையம், பரமத்தி வேலூர் ஆகிய 5 தொகுதிகளில் அதிமுக வேட்பாளர்கள் பி.எஸ்.மோகன், சி.சந்திரசேகரன், சந்திரசேகர், பி.தங்கமணி, சேகர் ஆகியோர் போட்டியிடுகின்றனர். ராசிபுரத்தில் அதிமுக கூட்டணியில் பாஜக வேட்பாளர் டி.துரைசாமி போட்டி யிடுகிறார்.

இவர்களை ஆதரித்து அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி திருச்செங்கோட்டில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது பேசிய அவர், "நாமக்கல் மாவட்டம் அதிமுகவின் கோட்டை. எனக்கு எம்பி என்று அடையாளம் கொடுத்த மாவட்டம் நாமக்கல் மாவட்டம். அதிமுக ஆட்சியில் அதிகமான திட்டங்களை பெற்ற ஒரே மாவட்டம் நாமக்கல் மாவட்டம்.

திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு அடியோடு கெட்டு விட்டது. எங்கு பார்த்தாலும் போதைப் பொருள் விற்பனை நடக்கிறது. திமுகவினர் கஞ்சா



விற்பனை செய்யும் நபர்களுக்கு துணை நிற்கின்றனர். அதனால் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. கஞ்சா போதைக்கு அடிமையானவர்கள் கொலை, கொள்ளை, வழிப்பறி, பாலியல் சீண்டல் உள்ளவற்றில் ஈடுபடுகின்றனர்.

திமுக ஆட்சிக்கு வந்த பிறகு 24 ஆயிரம் பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர். இதில் 18 ஆயிரம் பேர் சிறுமிகள். இதில் 6,900 பேருக்கு 84 கோடி ரூபாய் நிவாரணம் கொடுக்கப்பட்டுள்ளது. நிவாரணம் கொடுத்தால் சரியாக போய்விடுமா? பாலியல் பாதிப்பிற்கு ஆளான சிறுமிகளின் வாழ்க்கை என்னாவது. "அப்பா, அப்பா என்றால் எனது செவிக்கு மகிழ்ச்சியாக உள்ளது," என முதல்வர் ஸ்டாலின் சொல்கிறார்.

பாலியல் சீண்டலுக்கு உள்ளாகும் போது சிறுமிகளின் சத்தம் அந்த அப்பாவுக்கு கேட்கவில்லையா? திமுக ஆட்சியில் சிறுமிகள், பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. வயதான பெண்களுக்கும் பாதுகாப்பு இல்லை. அப்படிப்பட்ட மோசமான கேவலமான ஆட்சி தமிழகத்தில் நடந்து கொண்டுள்ளது.

போதை ஆசாமிகளின் செயலால் தமிழகம் தலை குனிந்து விட்டது. திருச்செங்கோடு தொகுதியில் கஞ்சா போதை மாத்திரை விற்பனை ஆகிறது. தேவனாங்குறிச்சியில் திமுக நிர்வாகி போலீஸ் மதுபான தொழிற்சாலை நடத்தினார்.

தமிழகத்தில் வறுமை என்ற நிலையே இல்லை என முதல்வர் ஸ்டாலின் பேசுகிறார். அப்படி வறுமை இல்லை என்றால் எதற்காக கிட்னி விற்பனை செய்கின்றனர். வறுமையை பயன்படுத்தி ஆளுங்கட்சியை சேர்ந்த எம்எல்ஏ ஒருவரின் மருத்துவமனையில் கிட்னியை கொள்ளையடிக்கின்றனர். இந்த கொள்கைகாக அமைக்கப்பட்ட குழு அந்த மருத்துவமனையில் சோதனை நடத்தி கிட்னி விற்பனை செய்யப்பட்டது உண்மை என அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்

இந்த திருட்டில் புரோக்கர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஆனால் சம்மந்தப்பட்ட மருத்துவமனை நிர்வாகம் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அதிமுக ஆட்சி அமைந்ததும் சட்டப்படி விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும். திமுகவினர் நடத்தும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று இருந்தால் போய் ஸ்கேன் செய்து பார்த்து கொள்ளவும்.

ஏனெனில் உறுப்புகள் காணாமல் போயிருக்கும். இந்த ஆட்சி கொடுமையான ஆட்சி. அதிமுக ஆட்சி அமைந்துடன் விசைத்தறி, கைத்தறிகளுக்கு கூடுதலாக இலவச மின்சாரம் வழங்கப்படும். நாடாளுமன்றத்தில் தொகுதி மறு வரையறை மக்கள் தொகை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டாம் என முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

தொகுதி மறுவரையறை வந்தால் நமக்கு எம்பி எண்ணிக்கை குறைந்துவிடும் எனவும் முதல்வர் ஸ்டாலின் பேசினார். ஆனால் நாடாளுமன்றத்தில் பேசிய அமித் ஷா தமிழகத்தின் எம்பி தொகுதிகள் எந்த விதத்திலும் பாதிக்காது. 59 தொகுதிகளாக அதிகரிக்கும் என்றார். அப்போது நமக்கு மத்திய அரசு சதகமாக உள்ளது என்று தானே அர்த்தகம்.

நாடாளுமன்றத்தில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா தோற்கடிக்கப்பட்டதால் நாட்டு மக்களின், பெண்களின் கனவு தோற்கடிக்கப்பட்டுள்ளது. இதற்கு காங்கிரஸ், திமுகவுக்கு தேர்தலில் சரியான பாடத்தை புகட்ட வேண்டும் என்றார்.

## "தமிழகத்தில் வீட்டில் இருக்கும் பெண்களுக்கே பாதுகாப்பு இல்லை" டிடிவி தினகரன் குற்றச்சாட்டு

சென்னை, ஏப்.20-

"தமிழகத்தில் வீட்டில் இருக்கும் பெண்களுக்கே பாதுகாப்பு இல்லை" என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் பழநியில் ஞாயிற்றுக்கிழமை (ஏப்.19) மாலை செய்தியாளர்களிடம் டிடிவி தினகரன் கூறியதாவது: "அதிமுக ஆட்சி அமைந்தவுடன் விருதுகரில் பட்டாசு ஆலை விபத்துகள் முழுமையாக தடுக்கப்படும். இந்த தேர்தலில் மக்கள் விரோத கூட்டணிக்கும், அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் தான் போட்டி.



ஓரிரு தொகுதிகளில் நான்கு முனைப் போட்டி நிலவுகிறது. பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவின் தோல்வி நாட்டில் உள்ள பெண்களுக்கான தோல்வி. தோல்வியடைந்ததாக நினைக்கும் எதிரணி யினருக்கு தான் தோல்வி. இது பிரதமர் மோடிக்கு வெற்றி தான் . 2029 நாடாளுமன்ற தேர்தலில் பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு கிடைக்கும் என்று நம்புகிறேன். பிரிந்து போனவர்களால் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றிக்கு எந்த பாதிப்பும் இருக்காது.

தமிழகத்தில் பச்சிளம் குழந்தைகள் முதல் மூதாட்டி வரை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர். பெண்கள் வெளியே சென்று வருவதற்கே அச்சம் உள்ளது. வீட்டில் இருக்கும் பெண்களுக்கே பாதுகாப்பு இல்லை. தமிழகத்தில் போதைப் பொருள்கள் எளிதாக கிடைப்பதால் மாணவர்களும், இளைஞர்களும் போதைக்கு அடிமையாகி விடுவார்களோ என்ற அச்சத்தில் தாய்மார்கள், குடும்பத்தினர் இருக்கின்றனர். தமிழகத்தில் இருப்பது பொம்மை முதல்வர் என்று எல்லோரும் பேசிக் கொள்கின்றன". இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தமிழகத்தில் தே.ஜ. கூட்டணிக்கு ஆதரவாக ஏப்.20, 21ல் சந்திரபாபு நாயுடு பிரச்சாரம்

சென்னை, ஏப்.20-

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளர்களை ஆதரித்து, ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு ஏப்ரல் 20 மற்றும் 21 தேதிகளில் தமிழகம் முழுவதும் இரண்டு நாள் பிரச்சாரப் பயணம் மேற்கொள்கிறார்.

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் பாஜக, அதிமுக, பாமக, அமமுக உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன. இக்கூட்டணியின் வேட்பாளர்களை ஆதரித்து ஆந்திர முதல்வரும்,



தெலுங்கு தேசம் கட்சியின் தலைவருமான சந்திரபாபு நாயுடு ஏப்ரல் 20, 21ஆம் தேதிகளில் தமிழகத்தில் பிரச்சாரம் செய்கிறார்.

ஏப்ரல் 20ல் கோவை நகரில் நடைபெறும் பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் சந்திரபாபு நாயுடு உரையாற்றவுள்ளார். அதன்பின்னர், ஓசூர் மற்றும் தளி ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்து, அங்கு நடைபெறும் மற்றொரு பொதுக்கூட்டத்திலும் அவர் கலந்து கொள்கிறார். மாலையில் சென்னை வந்தடையும் அவர், ஆவடி பகுதியில் நடைபெறும் பிரம்மாண்டமான ரோடு ஷோவில் பங்கேற்கிறார்.

ஏப்ரல் 21 அன்று மதுரை செல்லும் சந்திரபாபு நாயுடு, அங்கிருந்து சாத்தூர் சென்று சமூகத் தலைவர்களைச் சந்திப்பதுடன், பிரச்சார நிகழ்ச்சியிலும் பங்கேற்கிறார். அன்று மாலையில் அவரின் இப்பிரச்சாரப் பயணம் நிறைவடைகிறது.

## அரிய நோய் பாதித்த சிறுமியின் மருந்துக்கு ஆந்திர அமைச்சர் லோகேஷ் ரூ.6 கோடி நிதியுதவி

சென்னை, ஏப்.20-

ஆந்திர மாநிலம் கர்னூல் மாவட்டம், பெல்துர்த்தியை சேர்ந்த சுரேஷ் புஷ்பலதா தம்பதிக்கு கடந்த ஆண்டு ஏப்.12ம் தேதி பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்குப் பிறந்தது முதலே 'ஸ்பைனல் மஸ்குலர் அட்ராபி' (எஸ்எம்பி) எனும் அரிய வகை நோய் இருந்தது.

மேலும் நோய்க்குச் சிகிச்சை அளிக்க தேவைப் படும் ஒரு ஊசியின் மதிப்பு ரூ.16 கோடி எனவும் அந்த மருந்துவெளிநாட்டில் இருந்து வரவழைக்க வேண்டும் என்றும்மருத்துவர்கள் கூறியுள்ளனர். இதுதொடர்பாக குழந்தை புனர்விகாயின் பெற்றோர் சமூக வலைதளங்கள் மூலம் உதவி கோரினர். இதில் கடந்த ஓராண்டில் ரூ.10 கோடி மட்டுமே வசூலானது.

இதுகுறித்து தகவல் அறிந்த ஆந்திர கல்வித் துறை அமைச்சர் நாரா லோகேஷ், ஹைதராபாத்தில் அக்குழந்தை கிசிச்சை பெறும் மருத்துவமனைக்கு சென்றார். குழந்தையின் பெற்றோரை நலம் விசாரித்த அவர், மருத்துவர்களிடம் சிகிச்சை குறித்தும் கேட்டறிந்தார்.

பிறகு ரூ.6 கோடியை தானே வழங்குவதாக உறுதி அளித்தார். இதையடுத்து வெளிநாட்டில் இருந்து வரவழைக்கப்பட்ட ஊசி மருந்தை நேற்று அவர் நேரில் வழங்கினார். அந்த ஊசி புனர்விகா க்கு செலுத்தப் பட்டது. அப்போதுகுழந்தையின் பெற்றோர் அவருக்கு நன்றி தெரிவித்தனர். பிறகு 'எக்ஸ்' தளத்தில் "குழந்தை புனர்விகா நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும்" என அமைச்சர் லோகேஷ் பதிவிட்டுள்ளார்.

## "மம்தாவின் மகா காட்டு தர்பார் ஆட்சி பழங்குடியினர் நிலங்களை கைப்பற்றிவிட்டது" : பிரதமர் மோடி

புருலியா: ஏப்.20-

"மேற்கு வங்கத்தில் பழங்குடியின மக்களுக்கு தங்கள் சொந்த நிலத்தின் மீதே எந்த உரிமையும் இல்லை. மகா காட்டு தர்பார் ஆட்சி நடத்தும் திரிணமூல் காங்கிரஸின் சிண்டிகேட் சட்டவிரோதக் கும்பல்கள், பழங்குடியினரின் நிலங்களைக் கைப்பற்றித் தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது" என பிரதமர் மோடி தெரிவித்தார்.

மேற்கு வங்க மாநிலத்தின் முக்கியப் பழங்குடியின மாவட்டமான புரூலியாவில் நடந்த தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, "கடந்த 15 ஆண்டுகால திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியில், மேற்கு வங்கத்தில் வேலையின்மை அபாயகரமான நிலையை எட்டியுள்ளது. திரிணமூலின் 'மகா காட்டு தர்பார்' ஆட்சியே இந்த மாபெரும் நெருக்கடிக்குக் காரணமாகும். திரிணமூல் அமைச்சர்கள் ஆசிரியர் நியமனத்தில் கொள்ளையடித்து, ஆயிரக்கணக்கான இளைஞர்களின் வாழ்வை கேள்விக்குறியாக்கியுள்ளனர்.



திரிணமூல் காங்கிரஸின் முழுமையான 'காட்டு தர்பார்' ஆட்சியில், லஞ்சம் கொடுக்காமல் எந்த வேலையும் நடப்பதில்லை. லஞ்சம் கட்டாயமாக்கப்படும்போது, தொழிற்சாலைகள் எப்படிச் செழித்து வளர முடியும்?. எனவே, இம்மாநிலத்தில் தொழித்துறை சார்ந்த சூழலும் மிக மோசமான நிலையில் உள்ளது.

பொதுவாக நான் தேர்தல்கள் குறித்து எந்தக் கணிப்புகளையும் வெளியிடுவதில்லை; தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும் என்று நான் முன்கூட்டியே கூறுவதில்லை. ஆனால் இம்முறை, நான் யாரைச் சந்தித்தாலும், இந்த முறை பாஜக ஆட்சி அமைப்பது உறுதி என்றே கூறுகிறார்கள். இவை அனைத்தையும் கேட்ட பிறகு, இந்த முறை பாஜக மாபெரும் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கப்போகிறது என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.

திரிணமூல் காங்கிரஸின் 'மகா காட்டு தர்பார்' ஆட்சியில், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் மாவட்டங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளன. சாலைகள், மின்சாரம், குடிநீர், பள்ளிகள், மருத்துவமனைகள். என அனைத்தும் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. பழங்குடியின மக்களுக்குத் தங்கள் சொந்த நிலத்தின் மீதே எந்தக் கட்டுப்பாடும் இல்லை. திரிணமூல் காங்கிரஸின் சிண்டிகேட் சட்டவிரோதக் கும்பல்கள், பழங்குடியினரின் நிலங்களைக் கைப்பற்றித் தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

நெல் விவசாயிகள் இப்போது கடுமையான இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். இங்குள்ள பல நீர்ப்பாசனத் திட்டங்கள் முடங்கிக் கிடக்கின்றன. சுபர்ணரேகா திட்டத்தின் நிலையை மட்டும் பாருங்கள். பல ஆண்டுகள் கடந்துவிட்டன, ஆனால் கால்வாய்களுக்கு இன்னும் தண்ணீர் வந்து சேரவில்லை.

திரிணமூல் காங்கிரஸ் கட்சி, மேற்கு வங்க விவசாயிகளுக்கு ஒவ்வொரு கட்டத்திலும் துரோகம் இழைத்துள்ளது. உருளைக்கிழங்கு விவசாயிகளின் அவல நிலையை நாம் கண்கூடாகக் காண்கிறோம். சந்தைகள் மற்றும் குளிர்பதனக் கிடங்குகள் அனைத்தும் திரிணமூல் காங்கிரஸின் சிண்டிகேட் கட்டுப்பாட்டில் உள்ளன. பாஜக ஆட்சி அமைத்ததும், இந்தச் சிண்டிகேட் அமைப்பின் ஆதிக்கத்தை வேரோடு பிடுங்கி எறிந்து, அவர்களைத் துடைத்தெறிவோம். 'இரட்டை என்ஜின் அரசு' அமைவதன் மூலம், விவசாயிகளுக்கு 'இரட்டைப் பலன்கள்' கிடைக்கும்" என்றார்.


விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# அண்ணா அறிவாலயத்தில் இருந்து வருபவர்கள் யாரையும் தரக்குறைவாக பேச மாட்டார்கள்” திருச்சி சிவா



மதுரை, ஏப்.20-

“அண்ணா அறிவாலயத்தில் இருந்து வருபவர்கள் யாரையும் தரக்குறைவாக பேசமாட்டார்கள்'' என திமுக எம்.பி. திருச்சி சிவா பிரச்சாரம் செய்தார்.

மதுரை சிந்தாமணியில் திமுக வேட்பாளர் கிருத்திகாவை ஆதரித்து மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா பரப்புரை மேற்கொண்டார். அப்போது அவர், “தமிழகத்தில் கல்வி வளர்ச்சியும், பொருளாதாரமும், பெண்களின் வாழ்க்கைத் தரமும் மேம்பட்டுள்ளது. மேலும் இங்கு மக்கள் தொகை கட்டுப்பாட்டில் உள்ளது.ஆனால், இந்திய அளவில் 143 கோடி மக்கள் உள்ளனர். எதிர்காலத்தில் மக்கள் வாழ இடமே இல்லாமல் போகும் என்ற அச்சத்தில் உள்ளோம். இந்நிலையில், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற இடங்களில் அதிக எண்ணிக்கையில் மக்கள் உள்ளதால் அங்கு அதிக எண்ணிக்கை நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழகத்தில் குறைவாக இருப்பதால் குறைவான உறுப்பினர்களும் கொண்டு வரும் சூழலை ஏற்படுத்தினர்.2021ல் மு.க.ஸ்டாலின் ஆட்சி அமைய நீங்கள் உதவி செய்தீர்கள். மீண்டும் உங்களைத் தேடி வந்துள்ளோம். 50 ஆண்டுகளாக ஸ்டாலினுடன் பயணிப்பது எனக்கு பெருமை அளிக்கிறது. இந்தியாவிலேயே சிறந்த ஆட்சி தமிழகத்தில் மட்டுமே நடக்கிறது.

எல்லா கட்சிகளுக்கும், தலைவர்களுக்கும் வாக்கு கேட்க உரிமை உண்டு. உங்கள் ஆதரவு இன்றி யாரும் ஆட்சியில் அமர முடியாது. ஏழை பணக்காரர், படித்தவர் படிக்காதவர் என யாராக இருந்தாலும் அரசியல் ரீதியாக வாக்களிக்க வேண்டும். அண்ணா அறிவாலயத்தில் இருந்து வருபவர்கள் யாரையும் தரக்குறைவாக பேச மாட்டார்கள். வாக்குச் சாவடியில் நீங்கள் போய் நிற்கும் ஒரு நிமிடம் தான் அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை தீர்மானிக்கிறது.'' என்றார்.

# மகளிர் மசோதாவை தோற்கடித்த திமுகவுக்கு வாக்களிக்க வேண்டாம்: அண்ணாமலை வேண்டுகோள்




தருமபுரி, ஏப்.20-

மகளிருக்கான இட ஒதுக்கீடு மசோதாவை தோற்கடித்த திமுக கூட்டணிக்கு பெண்கள் வாக்களிக்க வேண்டாம் என தருமபுரியில் அண்ணாமலை வேண்டுகோள் விடுத்தார்.தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தருமபுரியில் பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை பேசியதாவது: தமிழகத்தில் 2021ல் திமுக ஆட்சிக்கு வந்ததும் கோவையும், தருமபுரியும் பழிவாங்கப் பட்டது. கரோனா தொற்றுக்கு மருந்து கொடுக்கவில்லை. மக்கள் வீதியில் இறங்கி போராடிய பிறகு தான் மருந்து கொடுக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் கோவை வந்தார். இவ்விரு மாவட்டங்களில் திமுகவுக்கு வெற்றி கிடைக்காததால் இரு மாவட்டங்களையும் புறக்கணித்தனர்.

பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் சட்டத் திருத்த மசோதாவை பிரதமர் மோடி கொண்டு வந்தார். அந்த மசோதா திட்டமிட்டு தோற்கடிக்கப் பட்டுள்ளது. மசோதாவுக்கு எதிராக வாக்களித்த திமுகவுக்கு பெண்கள் யாரும் வாக்களிக்காதீர்கள். இந்தியாவில் 1973ல் தான் இறுதியாக தொகுதிகள் மறுவரையறை நடந்தது.

525 ஆக இருந்த தொகுதிகள் 545 ஆக உயர்த்தப்பட்டன. அப்போது தமிழகத்துக்கு எம்.பி. தொகுதிகள் கூடுதலாக வேண்டாம் என்று முன்னாள் முதல்வர் கருணாநிதி தெரிவித்தார். தற்போது 39 மக்களவை தொகுதிகள் 59 ஆக மாற உள்ள சூழலில், மு.க.ஸ்டாலின் தமிழகத்தின் எம்.பி. தொகுதிகள் அதிகரிக்க வேண்டாம் என்கிறார்.திமுகவின் 5 ஆண்டு கால ஆட்சியில் பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் பல மடங்கு பெருகியுள்ளது. சரித்திரத்தில் இதுபோன்ற மோசமான ஆட்சியை பார்த்ததில்லை.. தமிழகத்துக்கு பிரதமர் மோடி தேர்தல் பிரச்சாரத்துக்கு வரும்போது கூட்டணி கட்சியைச் சேர்ந்த அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி அவருடன் இணைந்து ஒரே மேடையில் பிரச்சாரம் செய்கிறார்.ஆனால், ராகுல் காந்தி தமிழகத்துக்கு பிரச்சாரத்துக்கு வரும்போது கூட்டணியில் இருக்கும் திமுகவின் தலைவர் ஓரிடத்தில் பிரச்சாரத்தில் இருக்கிறார். இருவரும் இணைந்து ஏன் பிரச்சாரத்தில் ஈடுபடவில்லை, அவர்களது பொருந்தாதக் கூட்டணி எந்த நேரத்திலும் உடையும். இவ்வாறு பேசினார். கூட்டத்தில், எம்எல்ஏக்கள் வெங்கடேஸ்வரன், கோவிந்தசாமி மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# “தமிழகம் முழுவதும் திமுகவுக்கு எதிரான வெறுப்பு அலை வீசுகிறது” பாஜக தேசிய செய்தி தொடர்பாளர் கேசவன்

மதுரை,ஏப்.20-

“தமிழகம் முழுவதும் திமுகவுக்கு எதிரான வெறுப்பு அலை வீசி வருகிறது'' என பாஜக தேசிய செய்தி தொடர்பாளர் கேசவன் கூறினார்.

மதுரையில் பாஜக தேசிய செய்தி தொடர்பாளர் சி.ஆர்.கேசவன் இன்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழக முதல்வர் ஸ்டாலின் 2026 தேர்தலை தமிழ்நாடு அணியா, டெல்லி அணியா என திசை திருப்பி வருகிறார். இந்த தேர்தலில் மையப்புள்ளியாக இருப்பது திமுகவின் மெகா ஊழல் ஆட்சி தொடர வேண்டுமா அல்லது ஊழலற்ற நல்லாட்சி வர வேண்டுமா என்பது தான். திமுகவின் 5 ஆண்டுகால ஆட்சி இருண்ட ஆட்சி. இதுபோன்ற ஆட்சியை தமிழகம் இதுவரை பார்த்ததில்லை. திமுக கொடிய நச்சு கலந்த கிருமி. இந்த கிருமி 5 ஆண்டுகளாக தமிழக மக்களை தன் பிடியில் சிக்க வைத்து சின்னாபின்னமாக்கி வைத்துள்ளது. இந்த கிருமியை ஒழிப்பதற்கான செயல்திறன் மிக்க நம்பகத்தன்மை கொண்ட தடுப்பூசியாக அதிமுக, பாஜக கொண்ட தேஜ கூட்டணியை மக்கள் கருதுகின்றனர். கரோனாவை தடுப்பூசியை பயன்படுத்தி ஒழித்தது போல் தேஜ கூட்டணி என்ற தடுப்பூசியை கொண்டு திமுக என்ற கிருமியை மக்கள் ஒழிப்பது உறுதி.

மக்களிடம் திமுகவுக்கு எதிராக பெரியளவில் வெறுப்பு அலை வீசுகிறது. பிரச்சாரத்துக்கு செல்லும் அமைச்சர்களை மக்கள் விரட்டியடிக்கின்றனர். திமுகவுக்கு இன்னொரு முறை வாக்களித்தால் திருடனை அழைத்து கையில் வீட்டுச்சாவியை அழிப்பது போல் என மக்கள் நினைக்கின்றனர். இதனால் மக்கள் திமுகவுக்கு வாக்களிக்கமாட்டார்கள்.

மத்திய அரசு நிதி தரவில்லை என ஸ்டாலின் எப்போதும் பேசுகிறார். காங்கிரஸ் ஆட்சியில் தமிழகத்துக்கு ரூ.1.50 லட்சம் கோடி நிதி தான் வழங்கப்பட்டது. பாஜக ஆட்சியில் மூன்றரை மடங்கு அதிகமாக ரூ.5.20 லட்சம் கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதி எங்கே போனது எனத் தெரியவில்லை. மத்திய அரசு நிதி கொடுத்தும் ரூ.10.70 லட்சம் கோடி கடன் வாங்கி மக்கள் மத்தியில் கடன் சுமையை ஏற்றி வைத்துள்ளனர். பிரதமர் மோடி 2047ல் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதில் உறுதியாக உள்ளார். அப்போது தமிழ்நாடும் வளர்ச்சியடைந்த மாநிலமாக வர வேண்டும். அதற்கு தமிழகத்தில் தாமரை மலர வேண்டும்.

மதுரை தெற்கு தொகுதியில் பாஜக வேட்பாளர் ராம.சீனிவாசனுக்கு அதிக ஆதரவு உள்ளது. தமிழகம் முழுக்க தெரிந்தவர். அவரால் மதுரை தெற்கு தொகுதி கவனம் பெற்றுள்ளது. தொகுதிக்கு தனியான செயல் திட்டம் வைத்துள்ளார். 24 மணி நேரமும் தொகுதி மக்களுடன் இருந்து தேவைகளை பூர்த்தி செய்யத் தயாராக உள்ளார் தற்போதைய எம்எல்ஏ தலைமறைவாக இருக்கிறார். அவரை கூகுளில் தேடினால் கூட கிடைப்பதில்லை என இளைஞர்கள் சொல்கின்றனர். அவர் ஸ்டாலின், உதயநிதி, வைகோ, துரை வைகோவுக்கு தான் பம்பரமாய் வேலை செய்கிறார். இவ்வாறு அவர் கூறினார்.

# விருதுநகர் பட்டாசு ஆலை விபத்து: 20 பேர் பலி; பலர் படுகாயம்



விருதுநகர், ஏப்.20-

விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட விபத்தில் ஒரு கைக்குழந்தை உள்பட 20 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர். சம்பவ இடத்துக்கு மாவட்ட எஸ்.பி. ஸ்ரீநாதா விரைந்தார். விருதுநகர் மாவட்டம் கட்டனார்பட்டியில் உள்ளது வனஜா பட்டாசு ஆலை. இந்த ஆலையில் இன்று ஊழியர்கள் பட்டாசு தயாரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில், திடீரென்று ஏற்பட்ட விபத்தில் சிக்கி இதுவரை 20 பேர் உயிரிழந்ததாக தகவல். பலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பலி எண்ணிக்கை உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இதனிடையே, சம்பவ இடத்துக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீநாதா உள்பட உயர் அதிகாரிகள் விரைந்துள்ளனர். மீட்புப் பணியில் சாத்தூர், விருதுநகர் உள்ளிட்டப் பகுதிகளில் இருந்து வந்த தீயணைப்பு வாகனங்கள் ஈடுபட்டுள்ளன.முதற்கட்ட தகவலின்படி, பட்டாசு தயாரிக்கும் மருந்தில் ஏற்பட்ட உராய்வு காரணமாக விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. மேலும், ஞாயிற்றுக் கிழமையன்று விடுமுறை நாளாக இருந்தும் பட்டாசு தயாரிப்புப் பணி நடைபெற்றுள்ளதும் தெரியவந்துள்ளது.

முதல்வர் ஸ்டாலின் இரங்கல்: இதற்கிடையில், விபத்து குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், “விருதுநகர் மாவட்டம் கட்டனார்பட்டியில் ஏற்பட்ட பட்டாசு ஆலை வெடி விபத்தில் பலர் உயிரிழந்துள்ள துயரச் செய்தி மிகுந்த வேதனையளிக்கிறது. உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள்.

மீட்புப் பணிகளை விரைவுபடுத்திக் கண்காணிக்கவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் கூறவும் உடனடியாகச் சம்பவ இடத்திற்கு விரையுமாறு அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் தங்கம் தென்னரசு ஆகியோரைக் கேட்டுக் கொண்டுள்ளேன். இதுகுறித்து அறிந்ததுமே மாவட்ட ஆட்சியரைத் தொடர்புகொண்டு, தேவைப்படும் அனைத்து உதவிகளையும் ஒருங்கிணைக்க அறிவுறுத்தியுள்ளேன்.'' என்று தெரிவித்துள்ளார்

# ரஷ்ய கச்சா எண்ணெய் வாங்குவதற்கு அனுமதியை நீட்டித்தது அமெரிக்கா



வாஷிங்டன், ஏப்.20-

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதற்கான அனுமதியை அமெரிக்கா நீட்டித்துள்ளது.

மேற்கு ஆசிய போர் காரணமாக உலகம் முழுவதும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது. இதையடுத்து ஈரான் மற்றும் ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள் வாங்க விதிக்கப்பட்டிருந்த தடைக்கு ஒரு மாத காலம் அமெரிக்கா விலக்கு அளித்தது.இதனால் இந்தியா உட்பட பல நாடுகள் பலன் பெற்று வந்தன. அமெரிக்காவின் இந்த விலக்கு, ஏப்ரல் 11ம் தேதியுடன் முடிவடைந்தது. ஆனால், இந்த விலக்கு நீட்டிக்கப்பட மாட்டாது என அமெரிக்க நிதியமைச்சர் ஸ்காட் பெசன்ட் கடந்த 15ம் தேதி தெரிவித்திருந்தார். இந்நிலையில், ரஷ்ய கச்சா எண்ணெயை வாங்குவதற்கு வழங்கப்பட்ட அனுமதி மேலும் 1 மாதம் நீட்டிக்கப்படுவதாக அமெரிக்க நிதித் துறை வெள்ளிக்கிழமை இரவு அறிவித்தது. இதன் மூலம், அடுத்த மாதம் மே 16ம் தேதி வரை கப்பல்களில் ஏற்றப்படும் ரஷ்ய எண்ணெயை இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் கொள்முதல் செய்ய முடியும்.ரஷ்ய கச்சா எண்ணெயை அதிகளவில் வாங்கும் நாடுகளில் ஒன்றான இந்தியாவுக்கு இந்த நடவடிக்கை பேருதவியாக இருக்கும். தவிர பல நாடுகளும் பலன் அடையும்.ஐரோப்பிய சிந்தனைக் குழுவான ‘ஆற்றல் மற்றும் தூய்மையான காற்றுக்கான ஆராய்ச்சி மையம்' (CREA) அறிக்கையின்படி, பிப்ரவரி மாதத்தில் குறைந்திருந்த ரஷ்ய எண்ணெய் கொள்முதல், மார்ச் மாதத்தில் மீண்டும் அதிகரித்தது. மார்ச் மாதத்தில் ரஷ்யாவிடம் இருந்து இந்தியா வாங்கிய கச்சா எண்ணெய் அளவு 3 மடங்கு அதிகரித்து 5.3 பில்லியன் யூரோக்களை எட்டியதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.



# ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் மூடியது ஈரான்

## இந்திய டேங்கர் கப்பல் மீது துப்பாக்கிச் சூடு

டெஹ்ரான், ஏப்.20-

அமெரிக்கா தனது வாக்குறுதியை மீறியதால், ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் மூடுவதாக ஈரான் அறிவித்துள்ளது.அமெரிக்கா ஈரான் இடையே சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு முதல் கட்ட பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. இந்நிலையில் இஸ்ரேல் லெபனான் இடையே சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதால், ஹார் முஸ் ஜலசந்தியை திறப்பதாக ஈரான் அறிவித்தது. இதையடுத்து ஈரான் துறைமுகங்கள் மீதான கடற்படை முற்றுகை விலக்கி கொள்ளப்படும் என அமெரிக்கா வாக்குறுதி அளித்திருந்தது.இந்நிலையில் அமெரிக்கா ஈரான் இடையே இறுதி ஒப்பந்தம் ஏற்படும் வரை ஈரான் துறைமுகங்கள் மீதான கடற்படை முற்றுகை தொடரும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். இது ஒப்பந்த விதிமீறல் என்பதால், ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் மூடி கட்டுப்பாடுகள் விதிப்பதாக ஈரான் ராணுவம் அறிவித்தது.இதற்கிடையில், ஹார்முஸ் ஜலசந்தி திறக்கப்பட்டதாக அறிவிப்பு வெளியானதால், ‘ஜக் ஆர்னவ், சன்மர் ஹெரால்டு' ஆகிய 2 இந்திய ஆயில் டேங்கர் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க முயன்றன. அப்போது ஈரான் ராணுவத்தினர் 2 படகுகளில் வந்து எச்சரிக்கை விடுக்காமல், ‘ஜக் ஆர்னவ்' கப்பல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஆனால் சன்மர் ஹெரால்டு கப்பல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை.இதையடுத்து இந்த 2 கப்பல்களும் ஹார்முஸ் பகுதிக்கு திரும்பி சென்றன. இதில் கப்பலுக்கும் அதில் உள்ள ஊழியர்களுக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட ‘ஜக் ஆர்னவ்' என்ற இந்திய கப்பல், ஈராக்கில் இருந்து 20 லட்சம் பேரல் கச்சா எண்ணெய் ஏற்றிக் கொண்டு வந்தது.

இந்தியா அதிருப்தி: ஈரானின் 3 போர்க் கப்பல்களை, அமெரிக்க கடற்படையின் தாக்குதலில் சிக்காமல் வீரர்களுடன் இந்தியா பாதுகாத்து வருகிறது. இந்நிலையில் இந்திய ஆயில் டேங்கர் கப்பல் மீது ஈரான் ராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது. இது தொடர்பாக இந்திய அதிகாரிகள் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க இந்திய ஆயில் டேங்கர் கப்பல்களுக்கு எந்த தடையும் இல்லை. எனவே, இந்த தாக்குதல் குறித்து இந்திய கடற்படையும் விசாரித்து வருகிறது. ஓமன் வளைகுடா பகுதியில் உள்ள 3 இந்திய போர்க் கப்பல்கள், இந்திய ஆயில் டேங்கர் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பணியில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மகளிர் மசோதா நிறைவேறாதது அரசின் தோல்வி அல்ல: மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ கருத்து



புதுடெல்லி, ஏப்.20-

மக்களவையில் மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்த வகை செய்யும் மசோதா நிறைவேற்றப்படாதது அரசின் தோல்வி அல்ல என்று மத்தியஅமைச்சர் கிரண் ரிஜிஜூ தெரிவித்தார். நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் சிறப்பு கூட்டம் கடந்த 16ம் தேதி தொடங்கிது. அன்றைய தினம் மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்தை அமல்படுத்த வகை செய்யும் அரசியல் சாசன திருத்த (131வது திருத்தம்) மசோதா 2026, தொகுதி மறுவரையறை மசோதா 2026, யூனியன் பிரதேச சட்டங்கள் (திருத்த) மசோதா 2026 ஆகியவை மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டன. இதன் மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பிறகு நேற்று முன்தினம் வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் மசோதா தோல்வி அடைந்தது. இந்நிலையில், 3ம் நாளான நேற்று மக்களவை கூடியதும், சபாநாயகர் ஓம் பிர்லா நிறைவு உரையாற்றினார். இத்துடன் பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவடைந்தது. இதையடுத்து, நாடாளுமன்றம் மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ செய்தியாளர்களிடம் கூறும்போது, ‘‘எங்களிடம் பெரும்பான்மை உள்ளது. ஆனால், அரசியலமைப்பு திருத்த மசோதாவை நிறைவேற்ற தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை எங்களுக்குக் கிடைக்கவில்லை. இதனால் வாக்கெடுப்பின் போது மகளிர் இட ஒதுக்கீடு மசோதா தோல்வி அடைந்தது.

எனினும், இதை அரசின் தோல்வியாகக் கருதக் கூடாது. இந்த மசோதா தோற்கடிக்கப்பட்டதால், பெண்களின் கோபத்தை காங்கிரஸ் கட்சி எதிர்கொள்ள வேண்டியிருக்கும். பெண்களுக்கு எதிரானவர்கள் என்ற பெயரால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்க்கட்சிகள் அனுபவிக்க வேண்டியிருக்கும்'' என்றார்.

# ஏஐ தொழில்நுட்பம் காரணமாக மெட்டா நிறுவனத்தில் விரைவில் 16,000 ஊழியர்கள் பணிநீக்கம்




வாஷிங்டன், ஏப்.20-

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் (ஏஐ) காரணமாக மெட்டா நிறுவனத்தில் விரைவில் 16,000 ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட உள்ளனர்.அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம், மென்லோ பார்க் நகரை தலைமையிடமாகக் கொண்டு மெட்டா நிறுவனம் செயல்படுகிறது. இந்த நிறுவனம் வாட்ஸ் அப், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட பல்வேறு சமூக வலைதளங்களை நிர்வகித்து வருகிறது. தற்போது மெட்டா நிறுவனத்தில் சுமார் 79,000 பேர் பணியாற்றுகின்றனர். அவர்களில் 16,000 பேரை அடுத்த சில மாதங்களில் பணிநீக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. முதல்கட்டமாக மே மாதம் 8,000 பேர் பணி நீக்கம் செய்யப்பட உள்ளனர்.

இதுகுறித்து மெட்டா நிறுவன வட்டாரங்கள் கூறும்போது, “நிறுவனத்தின் பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டு இருக்கிறது. இதனால் நிறுவனத்தின் ஊழியர்களில் 20% பேரை நீக்க முடிவு செய்யப் பட்டுள்ளது. ஏஐ தொழில்நுட்பத்தால் ஊழியர்களின் தேவை குறைந்து வருகிறது. மேலும் நிறுவனத்தின் செலவும் படிப்படியாக குறைந்து வருகிறது'' என்று தெரிவித்தன.

கரோனா பெருந்தொற்று காரணமாக மெட்டா நிறுவனத்தில் 21,000 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டனர். அதன் பிறகு தற்போது அந்த நிறுவனம் மீண்டும் மிகப் பெரிய எண்ணிக்கையில் ஊழியர்களை பணிநீக்கம் செய்ய இருக்கிறது. மெட்டா மட்டுமன்றி பல்வேறு நிறுவனங்களில் ஆட்குறைப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்து உள்ளன. இதுகுறித்து சர்வதேச தொழில்நுட்ப நிபுணர்கள் கூறியதாவது:


ஏஐ தொழில்நுட்பத்தால் ஐடி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் வேலையிழப்புகள் அதிகரித்து வருகின்றன. கடந்த ஆண்டில் 1.5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வேலையிழந்தனர். இந்த ஆண்டில் ஆரக்கிள், அமேசான் உட்பட 95 பன்னாட்டு நிறுவனங்கள் ஆட்குறைப்பு நடவடிக்கையை மேற்கொண்டு உள்ளன. இதன் காரணமாக கடந்த சில மாதங்களில் மட்டும் 80,000 பேர் வேலையிழந்து உள்ளனர்.

அமெரிக்காவின் ஆரக்கிள் நிறுவனம் 30,000 பேரை பணி நீக்கம் செய்ய முடிவு செய்திருக்கிறது. இதில் முதல் கட்டமாக 12,000 பேர் அண்மையில் பணிநீக்கம் செய்யப்பட்டனர். அமேசான் நிறுவனத்தில் அண்மையில் 16,000 பேர் வேலையில் இருந்து நீக்கப்பட்டு உள்ளனர்.ஏஐ தொழில்நுட்ப பயன்பாட்டால் அமெரிக்காவின் யுனைடெட் பார்சல் சர்வீஸ் நிறுவனம் அடுத்த சில மாதங்களில் 30,000 பேரை பணி நீக்கம் செய்ய முடிவு செய்திருக்கிறது. பிரிட்டனின் முன்னணி ஊடகமான பிபிசி நிறுவனத்தில் 21,500 பேர் பணியாற்றுகின்றனர். ஏஐ பயன்பாட்டால் அந்த நிறுவனத்தில் விரைவில் 2,000 பேர் பணி நீக்கம் செய்யப்பட உள்ளனர். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சக்கர வியூகம்
20.04.2026 திங்கள்கிழமை

# மத்திய பிரதேசத்தில் பட்டப்பகலில் வங்கியில் புகுந்து ரூ.15 கோடி மதிப்புள்ள நகை, ரொக்கம் கொள்ளை





போபால், ஏப்.20-

பட்டப்பகலில் வங்கியில் புகுந்து ரூ.15 கோடி மதிப்புள்ள நகைகள், ரொக்கம் கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவம் மத்திய பிரதேசத்தில் நடந்துள்ளது.

மத்திய பிரதேச மாநிலம் சிங்க்ராவ்லி மாவட்டத்தில் மகாராஷ்டிர வங்கிக் கிளை உள்ளது. இந்த வங்கிக் கிளைக்கு நேற்று முன்தினம் பிற்பகலில் 2 பேர் வாடிக்கையாளர்கள் போல வந்தனர். அவர்கள் உள்ளே வந்தவுடன் அடுத்ததாக 3 பேர் உள்ளே நுழைந்தனர். உள்ளே வந்ததும் 5 பேரும் தங்களிடமிருந்த துப்பாக்கிகளை எடுத்து மேலே சுட்டு வாடிக்கையாளர்களை பயமுறுத்தினர். அனைவரையும் துப்பாக்கி முனையில் மிரட்டி வங்கி மேலாளரை அழைத்து லாக்கர் சாவிகளைக் கேட்டனர்.

அவர் தரமறுத்த போது அவரது தலையில் துப்பாக்கியின் பின்பகுதியால் தாக்கி சாவியைப் பிடுங்கினர். இதில் வங்கி மேலாளர் தலையில் காயமடைந்தார். 2 பேர் லாக்கர் ரூமில் நுழைந்து, வங்கிக் கிளையில் பொதுமக்கள் அடகு வைத்திருந்த நகைகளை அள்ளினர். மீதமிருந்த 3 பேரும் வாடிக்கையாளர்கள், வங்கி ஊழியர்களை துப்பாக்கி முனையில் நிறுத்தி வைத்திருந்தனர்.

20 நிமிடங்களில்..

அவர்கள் உள்ளே புகுந்த 20 நிமிடங்களில் தங்க நகைகள், ரொக்கத்தை கொள்ளை அடித்துக் கொண்டு தப்பிவிட்டனர். போலீஸார் வருவதற்குள் அவர்கள் தப்பியோடிவிட்டதாக வங்கி மேலாளர் தெரிவித்தார்.

இதுகுறித்து சிங்க்ராவ்லி போலீஸ் எஸ்.பி. மணீஷ் காத்ரி கூறும் போது, "பட்டப்பகலில் இந்தக் கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது. 9 முதல் 10 கிலோ எடையுள்ள தங்க நகைகள், ரூ.20 லட்சம் ரொக்கம் என மொத்தம் ரூ.15 கோடி மதிப்புள்ள பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

வந்தவர்களில் ஒருவர் மட்டுமே ஹெல்மெட் போட்டு வந்துள்ளார். மற்றவர்கள் அனைவரும் முகங்களை மறைக்காமலேயே வந்துள்ளனர். அருகில் இருந்த கடைகளில் வைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான முகங்களை வைத்து அவர்களைத் தேடி வருகிறோம். நகைகளைக் கொள்ளை அடித்ததும் அவர்கள் மோட்டார் சைக்கிள்களில் தப்பியோடி உள்ளனர்'' என்றார்.

# தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபட்ட 4 பேரை கைது செய்தது போலீஸ்



புதுடெல்லி, ஏப்.20-

டெல்லி போலீஸ் சிறப்புப் பிரிவு துணை ஆணையர் பிரவீன் குமார் திரிபாதி கூறியதாவது:மகாராஷ்டிரா, ஒடிசா மற்றும் பிஹார் மாநிலங்களைச் சேர்ந்த சிலர் ஆன்லைன் மூலமாக தீவிரவாத குழுவை ஏற்படுத்தி வருவதாக ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து இந்த கும்பலை கண்காணித்து வந்தோம். இதையடுத்து மகாராஷ்டிராவின் தானேவைச் சேர்ந்த மொசைப் அகமது என்ற சோனு, மும்பையைச் சேர்ந்த முகமது ஹமாத், ஒடிசாவின் புவனேஸ்வரைச் சேர்ந்த ஷேக் இம்ரான், பிஹாரின் கதிஹாரைச் சேர்ந்த முகமது ஷோகைல் ஆகிய 4 பேரை கைது செய்தோம்.இவர்கள் தீவிரவாத அமைப்பு மற்றும் முஸ்லிம் நாடு உருவாக்கும் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர்கள். ஜாகிர் நாயக் போன்ற மத பேச்சாளர்களின் உரைகளால் ஈர்க்கப்பட்டவர்கள். இவர்கள் இந்தியாவுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட தயாராகி வந்ததோடு, ஆன்லைன் மூலம் பிறரையும் தீவிரவாத இயக்கத்தில் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.சமூக ஊடகங்கள் மூலம் இந்த கும்பல் தீவிரவாத கொள்கைகளைப் பரப்புதல், பயிற்சி திட்டம், நிதி திரட்டுதல் பற்றி விவாதங்கள் நடத்தியுள்ளனர். ஒருவர் டெல்லி செங்கோட்டை,

இந்தியா கேட் ஆகிய இடங்களுக்கு கடந்த டிசம்பரில் சென்று ஆய்வு நடத்தியுள்ளார். இவர்களிடம் இருந்து வெடிபொருட்கள், செல்போன்களை பறிமுதல் செய்துள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



## மகளிர் இடஒதுக்கீடு மசோதா தோல்வி

# ராகுல் வீடு நோக்கி பாஜக பெண் தலைவர்கள் பேரணி

புதுடெல்லி, ஏப்.20-

மக்களவையில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது. இதன் மீது நடைபெற்ற வாக்கெடுப்பில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்த்து வாக்களித்தன. இதனால் இந்த மசோதா தோல்வியடைந்தது.இந்நிலையில், பாஜக நாடாளுமன்ற எம்.பி.க்கள் ஹேமமாலினி மற்றும் பன்சூரி ஸ்வராஜ் உள்ளிட்ட பெண் தலைவர்கள், டெல்லியில் உள்ள காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தியின் வீட்டை நோக்கி நேற்று ஒரு பிரம்மாண்டமான போராட்டப் பேரணியை நடத்தினர். அப்போது ராகுல் வீட்டில் இல்லை.வீதிப் போராட்டங்கள் முதல் சமூக வலைதளங்கள் வரை காங்கிரஸ் மற்றும் பிற எதிர்க்கட்சிகள் மீது பாஜக கடுமையான தாக்குதல்களைத் தொடுத்து வருகிறது. பாஜகவின் டெல்லி பிரிவு எக்ஸ் தளத்தில் பகிர்ந்த ஒரு போஸ்டரில், ராகுலை 'துரோகி' என்று குறிப்பிட்டுள்ளது.அந்தப் பதிவில் ''பெண் சக்திக்கான 33 சதவீத இடஒதுக்கீட்டைத் தடுத்த இந்த வில்லன்களை நாட்டின் சரிபாதி மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்'' என்று கூறப்பட்டுள்ளது. டெல்லி பாஜக தலைவர் வீரேந்திர சச்தேவா, கட்சி பெண் தலைவர்களுடன் இணைந்து இந்தப் பேரணியில் பங்கேற்றார்.இந்த போராட்டத்தில் எம்.பி.க்கள் கமல்ஜீத் செராவத், மஞ்சு சர்மா, கவுன்சிலர் யோகிதா சிங் மற்றும் கட்சியின் துணைத் தலைவர் லதா குப்தா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.அவர்கள் கைகளில் கருப்புக் கொடிகளையும், நெற்றியில் கருப்புப் பட்டைகளையும் கட்டியிருந்தனர். எதிர்க்கட்சிகள் பெண் சக்தியை அவமதிப்பதாகக் கூறும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர். டெல்லி முதல்வர் ரேகா குப்தாவும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு முழக்கங்களை எழுப்பினார்.3 எம்.பி.க்கள் கைது: இதனிடையே பேரணியாக சென்றவர்கள் மீது டெல்லி போலீஸார் தண்ணீரை பீய்ச்சி அடித்து கலைத்தனர். மேலும் எம்.பி.க்கள் பன்சூரி ஸ்வராஜ், ரக்சா காட்சே, கமல்ஜீத் செராவத் உள்ளிட்டோரை போலீஸார் கைது செய்தனர்.

# "விஜய் ஆதரவாளர்கள் வாக்குகளை வீணடிக்காமல் அதிமுக கூட்டணிக்கு செலுத்த வேண்டும்; அப்போதுதான்..." அன்புமணி



கடலூர்: ஏப்.20-

"விஜய் ஆதரவாளர்கள் உங்கள் வாக்குகளை வீணடிக்காமல் அதிமுக கூட்டணிக்கு செலுத்துங்கள். அப்போதுதான் திமுக ஆட்சி அகற்றப்படும்" என்று பாமக தலைவர் அன்புமணி தெரிவித்தார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தொகுதி மறுவரையறையை மக்கள் தொகை அடிப்படையில் கொண்டுவருவதாக மத்திய அரசு சொல்லவே இல்லை. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பை தொகுதிகள் எண்ணிக்கைக்காக பயன்படுத்தவில்லை, மகளிர் இட ஒதுக்கீட்டை எப்படி கொண்டுவருவது, எந்த தொகுதிகளில் பெண்கள் எண்ணிக்கை அதிகம் உள்ளது என்ற விஷயங்களுக்காகவே கணக்கில் எடுத்துள்ளனர். ஆனால் இவற்றைப் பற்றி கவலைப்படாமல் திமுக மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை எதிர்த்துள்ளது. ஒட்டுமொத்தமாக தமிழக பெண்கள் திமுகவை வீழ்த்தப் போகிறார்கள் என்பதே உண்மை.

முதல்வர் ஸ்டாலின் முதலில் தனது 5 ஆண்டு கால திட்டங்களை சொல்லி வாக்கு கேட்டார், அது மக்களிடம் எடுபடவில்லை. அதனால், இப்போது என்னையும், இபிஎஸ்சையும் பற்றி தனிநபர் அவதூறு பரப்புகிறார். தனது 5 ஆண்டுகால அரசில் செய்த சாதனைகள் மீது நம்பிக்கை இல்லாததால், ரூ.8 ஆயிரம் டோக்கனை நம்புகிறார் ஸ்டாலின்.

விஜயகாந்த் கட்சி தொடங்கியதே திமுகவை வீழ்த்தவும், திமுக அரசை வீழ்த்தவும் தான். இப்போது பிரேமலதா திமுக அணியில் சேர்ந்துவிட்டார். ஆனாலும் அவர் அங்கிருந்து கொண்டே எங்களுக்குதான் வேலை செய்கிறார். முதல்வரை வைத்துக் கொண்டே எங்கும் பாலியல் வன்கொடுமை நடக்கிறது, போதைப்பொருள் விற்கிறார்கள் என்று பிரேமலதா பேசுகிறார்.

விஜய் கட்சி தொடங்கிய காரணமே திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என்றுதான். எங்கள் நோக்கமும் திமுக ஆட்சியை அகற்றுவதுதான். விஜய் இந்த தேர்தலில் ஓரளவு வாக்குகள் பெறுவார். ஆனால் வெற்றிபெற முடியாது.

எனக்கு 2016ல் இதுபோலவே நல்ல ஆதரவு இருந்தது. ஆனால், கடைசியில் மக்கள் அதிமுகவுக்கு வாக்குகள் செலுத்தினர். அதே சூழல்தான் இப்போதும் உள்ளது. விஜய் ரசிகர்கள் எப்படியும் விஜய்க்கே வாக்களிப்பார்கள். ஆனால், விஜய் ஆதரவாளர்கள் அவர்களது வாக்குகளை வீணடிக்காமல் அதிமுக கூட்டணிக்கு செலுத்துங்கள். அப்போதுதான் திமுக ஆட்சி அகற்றப்படும். உங்கள் வாக்குகளை வீணடிக்காதீர்கள்'' என்று கூறினார்.

# மத்திய அரசு ஊழியர்களுக்கு 2 சதவீத அகவிலைப்படி உயர்வு: மத்திய அமைச்சரவை ஒப்புதல்



புதுடெல்லி, ஏப்.20-

மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப் படியை (DA) 2% உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மத்திய அரசு தனது ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ஆண்டுக்கு இரு முறை அகவிலைப்படி (ஞிகி) மற்றும் அகவிலை நிவாரணத்தை மாற்றி அமைக்கிறது. வழக்கமாக ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் இந்த மாற்றம் மேற்கொள்ளப்படுகிறது.

மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி கடைசியாக கடந்த அக்டோபர் மாதம் மாற்றி அமைக்கப்பட்டது. அப்போது 55லிருந்து 58% ஆக உயர்த்தப்பட்டது. இந்த உயர்வு ஜூலை 1, 2025 முதல் நடைமுறைக்கு வந்த நிலையில் நிலுவைத் தொகையுடன் அமல்படுத்தப்பட்டது. இதனால் பணியில் இருக்கும் ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் பலன் அடைந்தனர்.இந்நிலையில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான அகவிலை நிவாரணத்தை 2% உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. 8வது ஊதியக் குழுவின் கீழ் ஊதியக் கட்டமைப்பில் முக்கிய மாற்றங்களைச் செய்ய ஊழியர் சங்கங்களிடம் இருந்து கோரிக்கை வந்த நிலையில் இந்த உயர்வு அமலுக்கு வருகிறது.பிட்மென்ட் காரணியை 3.83 சதவீதமாகவும் குறைந்தபட்ச அடிப்படை ஊதியத்தை ரூ.18 ஆயிரத்தில் இருந்து 69 ஆயிரமாகவும் உயர்த்த ஊழியர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. ஊதியக் கணக்கீடுகளுக்கான 'குடும்பம்' என்பதன் வரையறையை பெற்றோர்களையும் உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தவும் முன்மொழிந்துள்ளன.மேலும் இந்தியாவுக்கு வரும் மற்றும் இந்தியாவில் இருந்து புறப்படும் இந்தியக் கொடி ஏந்திய கப்பல்களுக்கு நிலையான மற்றும் மலிவான காப்பீட்டு பாதுகாப்பை வழங்குவதற்காக ரூ.13,000 கோடி நிதியுடன் கூடிய இறையாண்மை கடல்சார் நிதிக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும் பிரதமர் கிராம சாலைகள் (பிஎம்ஜிஎஸ்ஒய்) திட்டத்தை 2028 வரை நீட்டிக்கவும் இதற்காக கூடுதலாக ரூ.3,000 கோடி ஒதுக்கீடு செய்யவும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது

# அமெரிக்க போர் விமானத்தில் பறந்த விமானப் படை தளபதி ஏ.பி.சிங்



புதுடெல்லி, ஏப்.20-

இந்திய விமானப் படை தளபதி ஏ.பி. சிங், அமெரிக்காவின் எஃப்15 ரக போர் விமானத்தில் பறந்தார். பாதுகாப்புத் துறைக்குத் தேவையான தளவாடங்களைக் கொள்முதல் செய்வதற்காகவும், பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவும் விமானப் படைத் தளபதி ஏ.பி. சிங் அண்மையில் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அதிநவீன வகை: இந்தப் பயணத்தின் போது அமெரிக்க பாதுகாப்புத் துறை அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார். இதனிடையே அமெரிக்காவின் நெவாடா மாகாணத்தில் உள்ள நெல்லிஸ் விமானப் படை தளத்துக்கு அவர் கடந்த 9ம் தேதி சென்றார். அப்போது அங்கு நிறுத்தப்பட்டிருந்த போயிங் எஃப்15 இஎக்ஸ் ஈகிள்2 ரகபோர் விமானத்தில் தளபதி ஏ.பி. சிங் ஏறி பறந்தார். அவருடன் அமெரிக்க விமானப் படையின் மேஜர் மேத்யூ பென்சன் உட்பட 2 பேர் இருந்தனர்.அமெரிக்க விமானப்படையில் இடம்பெற்றுள்ள அதிநவீன வகை போர் விமானமாகும் இது. அமெரிக்காவின் நவீன வகை போர் விமானத்தின் திறன்களையும் வான் போரில் அதன் பங்கையும் இந்திய விமானப் படைத் தளபதி சிறப்பாகப் புரிந்து கொள்ள இந்தப் பயணம் உதவியதாக அமெரிக்க விமானப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமானப் படை தளபதி ஏ.பி. சிங் தனது பயணத்தின் போது, அமெரிக்க விமானப் படையின் பிரிகேடியர் ஜெனரல் டேவிட் சி.எப்பர்சன் உள்ளிட்டோரை சந்தித்துப் பேசினார். விமானப்படை தளபதி ஏ.பி. சிங்குடன், இந்திய விமானப் படையின் ஏர் கமோடர் யஷ்பால் நேகியும் உடனிருந்தார்.

# "பெண்கள் அதிகம் அரசியலுக்கு வருவதில் திமுக, காங்கிரஸுக்கு அச்சம்" மத்திய அமைச்சர் மாண்டவியா




மதுரை: ஏப்.20-

"எம்பி தொகுதிகள் அதிகரித்து பெண்கள் அதிகளவில் அரசியலுக்கு வந்தால் தங்களின் வம்சாவளி ஆதிக்கம் பலவீனமடையும்,'' என திமுகவும், காங்கிரஸ் கட்சியும் அஞ்சுகிறது என மத்திய அமைச்சர் மான்சுக் மாண்டவியா குற்றம் சாட்டியுள்ளார்.

மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் மான்சுக் மாண்டவியா மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: ''நாடாளுமன்றத்தில் மகளிர் இட ஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை மசோதாக்களை நிராகரித்ததில் இருந்து காங்கிரஸ் மற்றும் திமுகவின் உண்மையான மனநிலை அம்பலமாகியுள்ளது. இருக் கட்சிகளும் அரசியலில் பெண்களுக்கு உரிய இடம் கிடைப்பதை விரும்பவில்லை என்பதையும் தெளிவாக காட்டுகிறது.

திமுகவும் காங்கிரஸும் ஒரு சில குடும்பங்களுக்கும் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள அரசியல் வட்டங்களுக்கும் அப்பால் அதிகாரம் செல்வதையும் விரும்பவில்லை என்று தெரிகிறது. காங்கிரஸும், திமுகவும் மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை பல ஆண்டுகளாக நிலுவையில் வைத்திருந்தன. முடிவெடுக்கும் நேரம் வரும் போதெல்லாம், சாக்குப் போக்குகள் கூறி அதைத் தடுத்து வந்தன.

இப்போது பிரதமர் மோடி பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவை கொண்டு வந்த நிலையில் மீண்டும் தடுத்து நிறுத்தியுள்ளனர். பெண்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என்பது அவர்கள் கூறுவது வெறும் அரசியல் முழக்கம் மட்டுமே. தொகுதி மறுவரையறை தொடர்பாக காங்கிரஸ் மற்றும் திமுகவால் தவறான தகவல்கள் பரப்பப் படுகின்றன. வேண்டும் என்றே தமிழ்நாடு மற்றும் தென்னிந்திய மக்களைத் தவறாக வழிநடத்து கின்றனர்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் கால முறை தொகுதி மறுவரையறைக்கு வழிவகை செய்கிறது. இந்த முறையால் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் உட்பட பல்வேறு பிரிவினருக்கான இடங்கள் அதிகரிக்கப்படும்.

நாடாளுமன்றத்தில் மூன்று மசோதாக்களும் நிறைவேற்றப்பட்டிருந்தால் மொத்த எம்பிக்களின் பலம் 850 ஆக அதிகரித்திருக்கும். தனி தொகுதிகளின் எண்ணிக்கை 131ல் இருந்து ஏறத்தாழ 205 ஆக உயர்ந்திருக்கும். தென்னிந்திய மாநிலங்களில் பிரதிநிதித்துவம் பெருமளவில் அதிகரித்திருக்கும்.

தமிழ்நாட்டின் தொகுதிகள் 39ல் இருந்து 59 ஆக அதிகரிக்கும். ஐந்து தென் மாநிலங்களில் தற்போதுள்ள 129 எம்பி தொகுதிகள் மறுவரையறைக்குப் பிறகு 195 தொகுதிகளாக அதிகரித்திருக்கும். இந்த வாய்ப்பை காங்கிரஸும் திமுகவும் தடுத்துவிட்டது.

இதனால் 2026 மக்கள் தொகைக் கணக்கெடுப் பிற்குப் பிறகு தொகுதித மறுவரையறை மேற்கொள்ளும் போது தமிழ்நாட்டிற்கு 29 தொகுதிகள் மட்டுமே கிடைக்கும். திமுகவும் காங்கிரஸின் செயலால் தமிழ்நாட்டுக்கும் தென்னிந்தியாவுக்கும் பிரதிநிதித்துவம் குறையும் நிலை எழுந்துள்ளது. தங்கள் அரசியல் தோல்விகளை மூடிமறைக்க தவறான தகவல்களைப் பயன்படுத்துகிறார்கள்.

தொகுதிகள் அதிகரித்து, அதிகளவில் பெண்கள் அரசியலில் நுழைந்தால் தங்களின் வம்சாவளி ஆதிக்கம் பலவீனமடையும் என திமுகவும், காங்கிரஸும் அஞ்சுகிறது. சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த மகள்கள் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்து தங்களின் ஏக போகத்திற்கு சவால் விடுவார்கள் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். மேடையில் அதிகாரமளித்தல் பற்றிப் பேசுகிறார்கள், ஆனால் நாடாளுமன்றத்திற்குள் அதை எதிர்க்கிறார்கள். அவர்களின் பாசாங்குத் தனம் இப்போது தேசத்தின் முன் முழுமையாக அம்பலமாகியுள்ளது.

இருப்பினும் போராட்டம் இத்துடன் நிற்காது. இந்தியப் பெண்கள் முன்னேறிச் செல்வார்கள். அவர்களை எந்த அரசியல் தடையும் தடுக்க முடியாது. பெண்கள் இடஒதுக்கீட்டை தடுக்க முயன்றவர்களுக்கு, இந்த நாட்டுப் பெண்கள் ஒரு வலுவான, ஜனநாயகப் பதிலடியைக் கொடுப்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.



■ தேசிய முற்போக்கு கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் சு.முத்துசாமி, கிழக்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் மற்றும் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் செந்தில்நாதன் ஆகியோர்களை ஆதரித்து மாநில இளைஞர் அணி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.



■ பெருந்துறை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் தோப்பு ND வெங்கடாஜலத்தை ஆதரித்து, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாக்கு சேகரித்தபோது. கட்சி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



## பத்மஸ்ரீ டாக்டர் சிவந்தி ஆதித்தனார் அவர்களின் 13 வது ஆண்டு நினைவு அஞ்சலி

தென்காசி, ஏப்.20-

பத்மஸ்ரீ டாக்டர் சிவந்தி ஆதித்தனார் அவர்களுடைய 13 வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் அகரக்கட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் பத்மஸ்ரீ டாக்டர் பா சிவந்தி ஆதித்தனார் திருவுருப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். தமிழர்களின் வீர விளையாட்டான கபடி விளையாட்டை உலக விளையாட்டு அரங்கில் சேர்த்த பெருமைக்குரியவர் என்றும் இதனால் தமிழகத்தில் உள்ள கபடி விளையாட்டு வீரர்கள் பல்வேறு பதக்கங்களும் பட்டங்களும் பெற முடிந்தது என்றும் இதனால் இந்திய கபடி விளையாட்டு வீரர்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட்டது என்றும் புகழாரம் சூட்டினார்கள். மேலும், இந்த நிகழ்வில் தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பு நிறுவன தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் பொருளாளர் சுப்ரமணியன் தென்காசி மாவட்ட தலைவர் ராஜ் நயினார் கடையநல்லூர் ஒன்றிய தலைவர் மணிகண்டன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## சத்தீஸ்கரில் பாய்லர் வெடித்ததில் உயிரிழப்பு 23 ஆக உயர்வு

ராய்ப்பூர், ஏப்.20-

சத்தீஸ்கர் மாநிலம் சக்தி மாவட்டம் சிங்தாராய் பகுதியில் வேதாந்தா குழுமத்துக்கு சொந்தமான அனல் மின் நிலையம் உள்ளது. இங்கு கடந்த 14ம் தேதி ஒரு பெரிய பாய்லர் திடீரென வெடித்து சிதறியது. இதில் 10 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.



இந்நிலையில் சிகிச்சை பெறுபவர்களில் ராய்ப்பூர், கல்டா மருத்துவமனையில் ஒருவரும் ராய்கர் மருத்துவக் கல்லூரியில் மற்றொருவரும் நேற்று உயிரிழந்தனர். இதனால் இந்த விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 23 ஆக உயர்ந்துள்ளது.பாய்லர் வெடிப்புக்கான காரணம் குறித்து தலைமை கொதிகலன் ஆய்வாளர் அளித்துள்ள முதற்கட்ட அறிக்கையில், ‘‘பாய்லர் உலைக்குள் அதிக எரிபொருள் தேங்கியதால் அழுத்தம் வேகமாக அதிகரித்தது. இந்த அழுத்தம் ஒரு கீழ் குழாயைப் பெயர்த்தெடுத்தது. இதனால் கட்டமைப்பு தோல்வி ஏற்பட்டு வெடிப்பு நிகழ்ந்தது’’ என்று கூறப்பட்டுள்ளது.சக்தியில் உள்ள தடய அறிவியல் ஆய்வகமும் இந்த காரணத்தை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த அறிக்கை மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையிடம் அளிக்கப்பட்டது. இது தொடர்பாக ஒரு மத்திய குழு விரிவான விசாரணை நடத்த உள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாகச் சக்தி மாவட்ட எஸ்.பி.உத்தரவின் பேரில் போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

## கடையநல்லூரில் ஆசிரியர்களுக்குப் பாராட்டு மகுடம்: தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் இருபெரும் விழா

தென்காசி ஏப். 20-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் கிளை தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில், பணி நிறைவு பெறும் ஆசிரியர்களுக்குப் பாராட்டு விழா மற்றும் தேசிய திறனாய்வுத் தேர்வில் (NMMS) சிறப்பிடம் பெற்ற பள்ளிகளுக்குப் பாராட்டு விழா என இருபெரும் விழாக்கள் கடையநல்லூர் சேனைத்தலைவர் சமுதாய நலக்கூடத்தில் எழுச்சியுடன் நடைபெற்றது.வட்டாரத் தலைவர் ஆறுமுகசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, மாவட்டத் தலைவர் ஆரோக்கியராசு, மாவட்டச் செயலாளர்



செய்யது இப்ராஹிம் மூசா, மாவட்டப் பொருளாளர் ஸ்டீபன் சேவியர் ஞானம் மற்றும் மாநிலச் செயற்குழு உறுப்பினர் மருது பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டாரச் செயலாளர் ரமேஷ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

சாதனைப் பள்ளிகளுக்குக் கௌரவம்:

தேசிய திறனாய்வுத் தேர்வில் மாவட்ட அளவில் சிறப்பிடம் பெற்ற சிதம்பராபேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, துரைச்சாமிபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கடையநல்லூர் மசூது தைக்கா நடுநிலைப்பள்ளி, ஆகிய பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்குப் பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.பணி நிறைவு ஆசிரியர்கள்: கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெறும் சொக்கம்பட்டி தேவதாசன், அருணாசலபுரம் முருகேஸ்வரி, மங்களாபுரம் சுகுணா தேவி, நெடுவயல் சங்கர சதா சிவ பாண்டியன் மற்றும் கடையநல்லூர் பாத்திமா பானு ஆகிய ஆசிரியர்களுக்குச் சந்தன மாலை அணிவித்துச் சிறப்புச் செய்யப்பட்டது. முன்னாள் நிர்வாகிகள் மற்றும் மாவட்டத் துணைச் செயலாளர்கள் பலரும் வாழ்த்துரை வழங்கினர்.

விழாவின் இறுதியில் வட்டாரத் துணைச் செயலாளர் ரவிச்சந்திரன் நன்றி கூறினார். வாசு மருதுபாண்டியன், சேகர், ஐயப்பன் உள்ளிட்ட ஏராளமான ஆசிரியர்கள் இவ்விழாவில் திரளாகக் கலந்துகொண்டனர்.



## கல்லாபுரம், எலையமுத்தூர் ஊராட்சிகளைக் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட திமுகவினர் அதிமுகவில் இணைந்தனர்

உடுமலை, ஏப்.20-

உடுமலை கிழக்கு ஒன்றியம், கல்லாபுரம் ஊராட்சி, திமுகவை சேர்ந்த ஒன்றிய மகளிர் அணி துணை அமைப்பாளர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முத்துலட்சுமி, மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் பழனிச்சாமி, அவர்கள் ஏற்பாட்டில் எலையமுத்தூர் ஊராட்சியை சேர்ந்த எலையமுத்தூர் திமுக கிளை தலைவர் ரமேஷ், செல்வபுரம் திமுக கிளை பிரதிநிதி படையப்பன் உட்பட திமுக மற்றும் காங்கிரஸ் கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் 30க்கும் மேற்பட்டோர் தங்களை,*திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் சி.மகேந்திரன் எம். ஏ ,எம். எல் .ஏ. அவர்கள் தலைமையில்,*

*அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை அடிப்படை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர்.*

*உடன் உடுமலை கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ராஜசேகரன், கல்லாபுரம் மற்றும் எலையமுத்தூர் ஊராட்சிகளை சேர்ந்த கழக நிர்வாகிகள்,கிளை கழக செயலாளர்கள், சார்பணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் இருந்தனர்*.



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் புனித வளனார் திருத்தலம் திருச்சபையில் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் டாக்டர் திலீபன் ஜெய்சங்கர் தீவிர பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிப்பு. உங்கள் வாக்குகளை இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து என்னை அமோக வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். பின்னர் இயேசுவை பிரார்த்தனை செய்து வழிபட்டு வந்தார்.



■ மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி மொடக்குறிச்சி சட்டமன்ற வெற்றி வேட்பாளர் சா.செந்தில்நாதன் அவர்களுடன் மொடக்குறிச்சி ஒன்றிய பகுதியில் குறிஞ்சியர் முன்னேற்ற பேரவை மாநில தலைவர் குறிஞ்சி ப.சந்திரசேகரன் உதயசூரியன் சின்னத்துக்கு தீவிர வாக்கு சேகரிப்பு.

## டிசிஎஸ் மதமாற்ற விவகாரம்: டெல்லி குண்டுவெடிப்பு குற்றவாளியுடன் நீடா கானுக்கு தொடர்பு

நாசிக், ஏப்.20-

மகாராஷ்டிராவின் நாசிக் நகரில் டிசிஎஸ் நிறுவனத்தின் பிபிஓ அலுவலகம் செயல்படுகிறது. இந்த நிறுவனத்தில் பணியாற்றும் பெண் ஊழியர்களை, மூத்த அதிகாரிகள் மிரட்டி பாலியல் வன்கொடுமை செய்திருப்பதாகவும் பல பெண்களைக் கட்டாய மதமாற்றம் செய்திருப்பதாகவும் புகார்கள் எழுந்துள்ளன.



இதுதொடர்பாக டிசிஎஸ் அலுவலகத்தின் 9 பெண் ஊழியர்கள் அளித்த புகார்களின் பேரில் 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. டிசிஎஸ் நிறுவன மூத்த அதிகாரிகள் தவுசிப் அத்தர், டேனிஷ் ஷேக், ரசா மேமன், ஷாரூக் குரேசி, ஆசிப் அன்சாரி, ஷபி ஷேக், அஸ்வினி சனானி ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர்.

மதமாற்ற விவகாரத்தில் மூளையாக செயல்பட்ட டிசிஎஸ் பெண் அதிகாரி நீடா கான் தலைமறைவாக உள்ளார். மகாராஷ்டிராவின் தானே நகரில் பணியாற்றும் அவரது கணவர் இக்பால் கானிடம், நாசிக் போலீஸார் நேற்று முன்தினம் விசாரணை நடத்தினர். அப்போது கடந்த 14ம் தேதி நீடா கான் வீட்டில் இருந்து வெளியேறியதாகவும் மும்பையில் உள்ள அத்தை வீட்டில் தங்கியிருப்பதாகவும் போலீஸாரிடம் இக்பால் கான் தெரிவித்தார். இதன்பேரில் நாசிக் போலீஸார், மும்பையில் நீடா கானை தேடினர். அவர் தங்கியிருந்த வீடு பூட்டிக் கிடந்தது. இதன்பேரில் 3 தனிப்படைகள் மும்பை முழுவதும் தீவிர தேடுதல் பணியில் ஈடுபட்டு உள்ளன.

கடந்த ஆண்டு நவம்பர் 10ம் தேதி டெல்லி செங்கோட்டை அருகே கார் குண்டுவெடிப்பு நிகழ்த்தப்பட்டது. இதில் 15 பேர் உயிரிழந்தனர். 20 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த வழக்கு தொடர்பாக உத்தர பிரதேசத்தை சேர்ந்த பெண் மருத்துவர் ஷாகின் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். பெண் மருத்துவர் ஷாகின், ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்பின் பெண்கள் பிரிவு மூத்த தலைவராக செயல்பட்டு வந்தார். அவருடன் நீடா கானுக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து நாசிக் போலீஸார் கூறியதாவது: நாசிக் டிசிஎஸ் அலுவலக மதமாற்ற விவகாரத்தின் ஆணி வேரை கண்டறிய தீவிர விசாரணை நடத்தி வருகிறோம். டெல்லி குண்டுவெடிப்பு குற்றவாளி மருத்துவர் ஷாகினுடன், நீடாகான் தொடர்பில் இருந்துள்ளார். இருவரும் சமூக வலைதளங்கள் வாயிலாக உரையாடி உள்ளனர். இதுதொடர்பான டிஜிட்டல்தகவல்கள் அழிக்கப்பட்டு உள்ளன. அவற்றை மீட்க தொழில்நுட்ப நிபுணர்களின் உதவியை நாடி உள்ளோம்.

எட்டு மாத கர்ப்பிணியாக இருக்கும் நீடா கான் தொடர்ந்து தலைமறைவாக இருந்து வருகிறார். அவரது கணவர் மற்றும் குடும்பத்தினர் போலீஸாருக்கு தவறான தகவல்களை அளித்து வருகின்றனர். இந்த வழக்கில் மகாராஷ்டிர தீவிரவாத தடுப்புப்பிரிவு போலீஸார் மற்றும் தேசிய புலனாய்வு அமைப்பின் உதவியை கோரி உள்ளதாக நாசிக் போலீஸார் தெரிவித்தனர்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000